








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 16.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- முக்கிய தினங்கள்












We Shine Academy

# தேசிய நிகழ்வுகள்

- **பொதுச் சேவை மையங்களில் தொலைபேசி மூலம் சட்ட உதவி அளிக்க மத்திய அரசு திட்டம்.**
    - ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் சட்ட ஆலோசனை தேவை அதிகரித்து வந்ததையடுத்து 117 மாவட்டங்களில் தொலைபேசி மூலம் சட்ட உதவி ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.
    - எஸ்சி, எஸ்டி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாகவும், பொதுப் பிரிவினருக்கு ரூ.20 கட்டணம் அமலில் உள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - சிஎஸ்சி மின்னாளுமை சேவைகள் இந்திய நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி தினேஷ் தியாகி.
        - தொலைபேசி சட்ட உதவிகளை பயன்படுத்துவதில் அஸ்ஸாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
        - மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகம் இதனை செயல்படுத்துகிறது.

- **சுங்கச் சாவடிகளில் பாஸ்டேக் முறையில் கட்டணம் வசூல்** - வாகனங்களுக்கு மேலும் ஒரு மாத காலம் அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
    - நெடுஞ்சாலைத் துறை மற்றும் சாலை போக்குவரத்து துறை

அமைச்சகம் நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளில் கட்டணம் வசூலிக்க தேசிய மின்னணு சுங்க வரித் திட்டத்தை செயல்படுத்தியது.

- இதற்காக "பாஸ்டேக்" எனும் மின்னணு முறையிலான பணப் பரிமாற்ற அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- **செய்தி துளிகள்:**
  - "பாஸ்டேக்" முறையின் முறைகேடுகளை தடுப்பதற்காக **"மை ஃபாஸ்டேக் மொபைல் ஆப்"** எனும் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
  - **"1033"** எனும் **இலவச தொலைபேசி சேவையை** சுங்கச் சாவடி மோசடிகளுக்காக மத்திய அரசு உருவாக்கியுள்ளது.
  - "வாகன்" எனப்படும் போக்குவரத்து துறையின் இணையமும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ளது.
  - இந்தியாவில் தற்போது 531 சுங்கச் சாவடிகள் உள்ளன.

## சர்வதேச நிகழ்வுகள்

- ஐ.நா. பருவநிலை மாநாடு தோல்வியடைந்தது.
  - பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் நோக்கில் ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட்டில் ஐ.நா. மாநாடு நடைபெற்றது.
  - இந்த மாநாட்டில் சுமார் 200 நாடுகள் பங்கேற்றன.
  - **செய்தி துளிகள்:**
    - பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தம் 2015-

ம் ஆண்டு இயற்றப்பட்டது.

- கரியமில வாயுவை கட்டுப்படுத்துவது பாரிஸ் ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளாகும்.
- **ஐரோப்பிய யூனியன் நாடுகள்** 2050-ம் ஆண்டுக்குள் **கரிய அமில வாயுவின் அளவை கட்டுப்படுத்த** "கரியமில மாசு சமநிலை" **ஒப்பந்தம்** ஏற்படுத்தியுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

- **வங்கதேச இண்டர்நேஷனல் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீரர் "லக்ஷய சென்" சாம்பியன் பட்டம்** வென்றார்.
  - வங்கதேச தலைநகர் டாக்காவில் போட்டி நடைபெற்றது.
  - **செய்தி துளிகள்**:
    - சர்வதேச பேட்மிண்டன் தரவரிசையில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து 6-ஆவது இடத்தில் உள்ளார்.
    - 2019 உலக சாம்பியன்ஷிப் பாட்மின்டன் போட்டியில் பி.வி. சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

## முக்கிய தினங்கள்

- **விஜய் திவாஸ் - டிசம்பர் 16**
  - **காரணம் :** கடந்த 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நிகழ்ந்த போரில் இந்தியா வெற்றி பெற்ற தினமாகும்.
  - இந்த வெற்றியின் மூலம் கிழக்கு பாகிஸ்தான் வங்கதேசம் எனும் தனி நாடாக உருவானது.
  - இந்தியா கேட் பகுதியில் உள்ள அமர் ஜவான் ஜோதியில்

முப்படைகளின் தளபதிகளுடன் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் அஞ்சலி செலுத்துவார்.

- இந்த போர் வங்கதேச விடுதலைப் போர் என்றழைக்கப்படுகிறது.

We Shine Academy™